செ.வெ.எண்: 38 நாள்: 20.01.2018

**திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழு சார்பில் நடைபெற்ற சட்டப்பணிகள் முகாம் களம் நிகழ்ச்சியை கூடுதல் மாவட்ட நீதிபதிகள் திரு.அப்துல் காதர் அவர்கள், திரு.ராஜசேகரன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தொடங்கி வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

---

திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழு சார்பில் சட்டப்பணிகள் முகாம் களம் நிகழ்ச்சி இன்று (20.01.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு சட்டப்பணிகள் முகாம் களத்தினை தொடங்கி வைத்து பல்வேறு அரசு துறைகளின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். 1வது கூடுதல் மாவட்ட நீதிபதி திரு.அப்துல் காதர் அவர்கள், மக்கள் நீதிமன்ற தலைவர்/மாவட்ட நீதிபதி திரு.ராஜசேகரன் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

திருநெல்வேலி மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு சார்பில் அரசு திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும்,பொது மக்களிடம் மனுக்களை பெற்று தீர்வு கானும் வகையில் சட்டப்பணிகள் முகாம் களம் நடத்தப்படுகிறது. இது கிராமபுரங்களில் நடத்தப்படும் மனு நீதி நாள் போன்றதாகும். மத்திய மாநில அரசுகளின் சார்பில் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தபடுகிறது. இத்திட்ங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 31 துறைகளின் சார்பில் இங்கு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.மேலும் ஆதார் முகாமும் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்துதுறைகளின் அலுவலர்களும் இங்கு வருகை தந்துள்ளனர். பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் குறித்த விழிப்பணர்வு ஏற்படுத்துவதுடன் மனுக்கள் பெற்று தீர்வு கான உள்ளனர். சட்ட பணிகள் முகாம் களம் தமிழகத்தில் முதல் மாவட்டமாக நமது மாவட்டத்தில் நடத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் இம்முகாமினை சிறப்பாக பயன்படுத்திகொள்ளவேண்டும் என பேசினார்.

தொடர்ந்து சட்ட கல்லூரி மாணவர்களுக்கு உள்பயிற்சி முகாம் சான்றிதழ்கள்,வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் 15 ஆண்டுகளுக்கு மேல் விபத்து இன்றி பயணிகள் போக்குவரத்து வாகனம் ஒட்டிய 8 டிரைவர்களுக்கு விருதுகளையும், வேளாண்மைத்துறையின் மூலம் 10 நபர்களுக்கு ரூ.42,200 மதிப்பிலும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை 9 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயற்கை அவைங்கள் 10 நபர்களுக்கு ரூ.1.99 லட்சம் மதிப்பிலும், மகளிர் திட்டத்தின் மூலம் 10 சுயஉதவிகளுக்கு ரூ.5.05 லட்சம் மதிப்பிலான கடன் உதவிகளையும்,தாட்கோ மூலம் 10 நபர்களுக்கு ரூ.28.77 லட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடன் உதவிகளையும் தோட்டக்கலைத்துறையின் மூலம் 5 நபர்களுக்கு ரூ.16,120 மதிப்பிலான மானிய உதவிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார். மேலும் பல்வேறுதுறைகளின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கபட்டது. துறை அலுவலர்கள் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் 2வது கூடுதல் மாவட்ட நீதிபதி திருமதி சந்திரா,தலைமை குற்றவியல் நீதிபதி திரு.ராஜமாணிக்கம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழு செயலர் திரு.ராமலிங்கம், வழக்கறிஞர் சங்கத்தலைவர் திரு.செந்தில்குமார்,மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா, வேளாண்மை இனை இயக்குனர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை திருமதி. சாந்திராணி மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு. வெங்கடேஸ்வரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி